செய்தி வெளியீடு எண்: 1 0 8 நாள் : 13.03.2015

**செய்தி வெளியீடு**

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிய, இருதயப் பிரிவில் இரண்டு வருட அனுபவம் மற்றும் 55 வயதிற்குட்பட்ட கண்சல்டண்டுகள்/சிறப்பு மருத்துவர்கள், எம்பிபிஎஸ்+டிப்ளமோ தேர்ச்சியுடன் 45 வயதிற்குட்பட்ட ரெசிடெண்ட் மருத்துவர்கள், பிஎஸ்சி/எம்எஸ்சி செவிலியர் படிப்பில் தேர்ச்சி பெற்ற மூன்று வருட அனுபவம் மற்றும் 35 வயதிற்குட்பட்ட பெண் செவிலியர்கள் மற்றும் பிஎஸ்சி பட்டப்படிப்பில் எக்கோ, கேத்லேப், ரெஸ்பிரேடரி மற்றும் பர்பியூசனிஸ்ட் ஆகிய பாட பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற மூன்று வருட அனுபவம் மற்றும் 35 வயதிற்குட்பட்ட பெண் டெக்னிசியன்களுக்கான நேர்முகத் தேர்வு புதுடில்லி, பெங்களூரு மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் 15.3.2015 முதல் 22.3.2015 வரை நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட், இருப்பிடம் மற்றும் இதர சலுகைகளும் வேலையளிப்போரால் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு இருதயப் பிரிவில் பணி அனுபவம் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் ஒரு புகைப்படத்துடன், ovemcldr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்கள் அறிய 044–22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவும் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் அறியலாம்.

நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
சென்னை

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**